

நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் முன்னிலையில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (08.10.2024) தலைமைச் செயலகத்தில், எதிர் வரும் வடகிழக்கு பருவமழைக்கான முன்னெச்சரிக்கை பணிகள் மற்றும் நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகளின் முன்னேற்றம் குறித்து, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி ஆகியோருடன் ஆலோசனை மேற்கொண்டார். இக்கூட்டத்தில் துணை முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நீர்வளத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.க.மணிவாசன், நீர்வளத் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் சா.மன்மதன் ஆகியோர் உடனிருந்தனர்.

## திராவிட மாடல் அரசின் நோக்கமே

# திட்டங்களைக் காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டும் என்பதுதான்!

### வட சென்னை வளர்ச்சித்திட்ட ஆய்வுக்கூட்டத்தில்

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தல்!

**சென்னை,அக்.9-**

**சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின் பேரில், வட சென்னை வளர்ச்சித் திட்டம் தொடர்பான ஆய்வுக்கூட்டம், நேற்று நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு உரிய ஆலோசனைகளை வழங்கிப் பேசினார்.**

**மேலும், வட சென்னை வளர்ச்சித் திட்டம் மூலம் நடைபெறும் பணிகளைக் கண்காணிக்கின்ற வகையில், பிரத்யேக செயலி மற்றும் இணையதளத்தின் பயன்பாட்டைத் தொடங்கி வைத்தார்.**

**இதைத் தொடர்ந்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:**

கழக அரசையும் சென்னையின் வளர்ச்சியையும் பிரித்து பார்க்க முடியாத அளவுக்கு ஒன்றுடன் ஒன்று தொடர்பு உடையவை. எப்போதெல்லாம் நம் கழக அரசு அமைகிறதோ, அப்போதெல்லாம் சென்னை மாநகரம் மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளது.

**அண்ணா மேம்பாலம்!**

1970-களில் சென்னையின் அப்போதைய போக்குவரத்து நெரிசலை மனதில் வைத்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசால் கட்டப்பட்ட அண்ணா மேம்பாலம், 1973-இல் திறந்து வைக்கப்பட்டது. அன்று கலைஞர் அரசு கட்டிய அண்ணா மேம்பாலம், 50 ஆண்டுகளைக் கடந்து, இன்றும் மக்களுக்கு மிகுந்த பயன் தந்து வருகிறது.

அந்த வரிசையில் மருத்துவமனைகள், கல்வி நிலையங்கள், மேம்பாலங்கள், நூலகங்கள் என நூற்றுக்கணக்கான மக்கள் நலத் திட்டங்களை கழக அரசு சென்னைக்குத் தந்தள்ளது, இன்றும் தந்துகொண்டு வருகிறது.

**கொளத்தூர் தொகுதி!**

தென்சென்னையுடன் ஒப்பிடும் போது, வட சென்னையின் வளர்ச்சி சற்றே குறைவு என்ற எண்ணம் மக்களுக்கு உண்டு. நம் முதலமைச்சர் அவர்கள், "தி.மு.க. உருவானதும் வட சென்னையில்தான். முதல்வரான என்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்ததும் இந்த வடசென்னையில் அமைந்துள்ள கொளத்தூர் தொகுதி மக்கள்தான்" என்று பெருமையோடு குறிப்பிட்டுள்ளார்.

**வடசென்னை வளர்ச்சித் திட்டம்!**

இவற்றையெல்லாம் மனதில் வைத்துத்தான் நம் முதலமைச்சர் அவர்களால் 'வடசென்னை வளர்ச்சித் திட்டம்' உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுமார் 5 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 225 திட்டங்களைக் கொண்ட தொகுப்புதான் இந்த வட சென்னை வளர்ச்சித் திட்டம்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (08.10.2024) தலைமைச் செயலகத்தில், சிறப்பு திட்ட செயலாக்கத் துறையின் மூலம் செயல் படுத்தப்பட்டு வரும் வடசென்னை வளர்ச்சித் திட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி செந்தில் பாலாஜி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர்கள், துறைச் செயலாளர்கள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மருத்துவமனைகள், பேருந்து முனையங்கள், பள்ளிக் கட்டடங்கள், விளையாட்டு அரங்கங்கள் உள்ளிட்ட மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்தரக்கூடிய பல திட்டங்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

இந்தத் திட்டங்களைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்கவேண்டும் என்பதுதான் நம் திராவிட மாடல் அரசின், நம் முதலமைச்சரின் நோக்கம்.

அந்த வகையில், சில திட்டங்கள் பணிகள் முடிந்து நிறைவு பெற்றுள்ளன. சில திட்டப் பணிகள் தொடங்கி, நடைபெற்று வருகின்றன. ஆனால், சில திட்டங்கள் மட்டும் இன்னும் தொடங்கப்படாமல் இருக்கின்றன. சில திட்டப் பணிகள் அரசாணை வெளியிடப்பட்டு, ஒப்பந்தப் புள்ளி கோரப்படாமல் இருக்கிறது.

இந்தத் தாமதம் எதனால் என்பதை கண்டறிந்து, தொடங்கப்படாமல் இருக்கும் பணிகள், உடனடியாக அதாவது டிசம்பர் முதல் வாரத்திற்குள் கண்டிப்பாகத் தொடங்கப்பட வேண்டும் என்பது தான் இந்த ஆய்வுக் கூட்டத்தின் நோக்கம்.

இந்தக் கூட்டத்தில், பணியின் தொடக்கம், முன்னேற்றம், அவை எப்போது முடியும் என்பதற்கான டைம் லைன்-ஐ நீங்கள் எனக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நம் முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசின் எண்ணற்றச் சாதனைகள் மக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாகச் செயல்படுத்தப்படும் 'வடசென்னை வளர்ச்சித் திட்ட'த்தையும் அனைத்து அரசு அலுவலர்களும் உறுதுணையாக இருந்து முடித்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்

இவ்வாறு அவர் பேசினார்.

**பங்கேற்றவர்கள்!**

அமைச்சர்கள் கே.என்.நேரு, செந்தில்பாலாஜி, மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு , கோவி.செழியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சி.வி.கணேசன், தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஐ.ஏ.எஸ் மற்றும் துறை சார்ந்த அரசு அதிகாரிகள், அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், மெரினா கடற்கரையில் ரூ.1.37 கோடி மதிப்பில் புதுப்பிக்கப்பட்ட மெரிளா நீச்சல் குளத்தினை நேற்று (08.10.2024) பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு, உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் கோவி. செழியன், மேயர் திருமதி ஆர், பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, மதிப்பிற்குரிய துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப, மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் த. இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே. சிற்றாக, மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையர் (பொ) சுட்டா ரவி தேஜா, மாமன்ற ஆளும்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், மெரினா கடற்கரையில் ரூ.1.37 கோடி மதிப்பில் புதுப்பிக்கப்பட்ட மெரினா நீச்சல் குளத்தினை நேற்று (08.10.2024) பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, நீச்சல் குளத்தின் பயன்பாட்டினை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு, உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் கோவி. செழியன், மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, மதிப்பிற்குரிய துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையர் (பொ) கட்டா ரவி தேஜா, மாமன்ற ஆளும்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ரூ 1.37 கோடி மதிப்பில்

# புதுப்பிக்கப்பட்ட மெரினா நீச்சல் குளம்!

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, அக்.9-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-114க்குட்பட்ட மெரினா கடற்கரையில் ரூ.1.37 கோடி மதிப்பில் புதுப்பிக்கப்பட்ட மெரினா நீச்சல் குளத்தினை நேற்று (08.10.2024) பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

தொடர்ந்து, தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், மெரினா நீச்சல் குளத்தில் குளிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்தல் மற்றும் கட்டணம் செலுத்துவதற்கான QR Code கட்டண சேவையைத் தொடங்கி வைத்து, நீச்சல் குளத்தினை சுற்றி பார்வையிட்டார்.

மெரினா நீச்சல் குளமானது, 1942ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் உலகப் போரின் போது உருவாக்கப்பட்டது. 1947ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னை மாநகராட்சியிடம் இந்த நீச்சல் குளம் ஒப்படைக்கப்பட்டது. 1947 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 77 ஆண்டுகளாக சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில் தனியார் பராமரிப்பில் விடப்பட்ட இந்த நீச்சல் குளம் தற்போது ரூபாய் 1 கோடியே 37 இலட்சம் மதிப்பில் புதுப்பிக்கப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியால் நேரடியாக பராமரித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த புதுப்பிக்கப்பட்ட நீச்சல் குளத்தின் நடைபாதையை சீரமைத்து வர்ணம் பூசுதல், நடைபாதையில் புதிய கற்கள் மற்றும் ஓடுகள் பதித்தல் உள்ளிட்ட பராமரிப்புப் பணிகள், பார்வையாளர்கள் அமரும் இடத்தில் மேற்கூரை அமைத்தல், குளத்தைச் சுற்றியுள்ள சுவரில் வண்ண ஓவியம் வரைந்து அழகுபடுத்துதல், ஒப்பனை அறை, குளியலறை, உடை மாற்றும் அறைகளை பழுதுபார்த்து மேம்படுத்துதல், போதிய மின்விளக்கு வசதிகள் உள்ளிட்ட பல்வேறு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நீச்சல் குளம் 100 மீட்டர் நீளமும், 30 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. குறைந்த அளவாக 3.5 அடியும், அதிக அளவாக 5 அடி உயரமும் உடையது. மேலும், இந்த நீச்சல் குளமானது காலை 5.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை செயல்படும். காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை பெண்களுக்கான நேரமாகும்.

இந்த நீச்சல் குளத்தில் குளிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்தல் மற்றும் கட்டணம் செலுத்துவதற்காக QR Code உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நீச்சல் குளத்தில் 1 மணி நேரத்திற்கு பெரியவர்களுக்கு ரூ.50/- எனவும், இதனை ஆன்லைனில் பதிவு செய்பவர்களுக்கு 10 சதவீதம் சிறப்புச் சலுகையாக ரூ.45/-ம், 12 வயது முதல் 14 வயது வரையுள்ள சிறுவர்களுக்கு ரூ.30/- எனவும், ஆன்லைனில் பதிவு செய்பவர்களுக்கு 10 சதவீதம் சிறப்புச் சலுகையாக ரூ.25/-எனவும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த நீச்சல் குளமானது, பராமரிப்புப் பணி காரணமாக திங்கட்கிழமை அன்று வார விடுமுறை விடப்படுகிறது. இந்த நீச்சல் குளம் இன்று (09.10.2024) முதல் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு செயல்படும்.

இந்த நீச்சல் குளத்தில் 10 உயிர் பாதுகாவலர்கள், 8 தூய்மைப் பணியாளர்கள், 10 சுத்தம் செய்யும் பணியாளர்கள், 2 கண்காணிப்பாளர்கள், 6 பாதுகாவலர்கள், 2 எலக்ட்ரீஷியன் மற்றும் பிளம்பர் என மொத்தம் 38 பணியாளர்கள் சுழற்சி முறையில் பணியாற்றிட நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் கோவி. செழியன், மேயர் திருமதி ஆர். பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ.விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையர் (பொ) கட்டா ரவி தேஜா, மாமன்ற ஆளும்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகத்தில்

# அலுவலக உதவியாளர் பணி - விண்ணப்பங்கள் வரவேற்பு!

### சென்னை உயர்நீதிமன்றம் அறிவிப்பு!

*சென்னை, அக்.9-*

*சென்னை - உயர்நீதிமன்றம் - அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அலுவலக செய்தி வெளியீடு வருமாறு :-*

*சென்னை உயர்நீதிமன்றம் வளாகம், சட்ட அலுவலர்கள் கட்டிடம், 3வது தளத்தில் அமைந்துள்ள அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளர் பணியிடம் ஒன்று காலியாக உள்ளது. இப்பணிக்கு 8 - ஆம் பகுப்பு தேர்ச்சி பெற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம் அல்லாதவர்) மற்றும் (முன்னுரிமை அல்லாதவர்) [BC (other than BC Muslim) and (Non - Priority)] விண்ணப்பிக்கலாம்.*

*01.07.2024 - அன்றுள்ளவாறு 18 வயது முதல் 34 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும். இப்பணிக்கான சம்பள விகிதம் ஊதிய நிலை - 1, ரூ. 15,700/- ஆகும். இதற்கான விண்ணப்பத்தினை, "அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அலுவலகம், சட்ட அலுவலகர்கள் கட்டிடம் (3 வது தளம்), சென்னை - 600 104" என்ற முகவரிக்கு 25.10.2024 மாலை 5.45 மணிக்குள் வந்து சேருமாறு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப உறையின் மேல் "அலுவலக உதவியாளர் பணிக்கு விண்ணப்பம்" என்று எழுதப்பட வேண்டும்.*

*சென்னை மாவட்டத்தை சேர்ந்த விண்ணப்பதாரர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரரின் புகைப்படம், கல்வித்தகுதிச் சான்றிதழ்கள், சாதிச் சான்றிதழ் மற்றும் பிற சான்றிதழ்களின் நகல்களில் சுய சான்றொப்பமிட்டு (Self Attested) இணைக்கப்பட வேண்டும். விண்ணப்ப உறையினுள் முகவரியுடன் கூடிய ஒரு "Self envelope cover affixed with Rs. 50/- Postal Stamp" - வைத்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.*

*இவ்வாறு அந்த செய்தி வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு–114க்குட்பட்ட மெரினா கடற்கரையில் புதுப்பிக்கப்பட்ட மெரினா நீச்சல் குளத்தினை நேற்று (08.10.2024) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, பொதுமக்கள் ஆன்லைன் மூலமாக குளிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்தல் மற்றும் கட்டணம் செலுத்துவதற்கான QR Code கட்டண சேவையைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு, மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் கோவி. செழியன், மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, மதிப்பிற்குரிய துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே. சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன், இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையர் (பொ) கட்டா ரவி தேஜா, மாமன்ற ஆளும்கட்சித் துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் (எ) தனசேகரன், மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.